# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவை
## (திருத்தம்)

***1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

---

*நீதி அமைச்சர் அவர்களால் 2015, திசெம்பர் மாதம் 11 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2015, நவெம்பர் மாதம் 09 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ ***46 ஆம் சட்டமூலம்*** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

2-PL 009561-475 (2015/12)

## *சட்டப்பயன் பற்றிய கூற்று*

***வாசகம் 2 :*** *இவ்வாசகம் (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 135 ஆம் பிரிவை அதன் (1) ஆம் உட்பிரிவின் (உ) என்னும் பந்தியில் தண்டனைச்சட்டக் கோவையின் 291இ என்னும் பிரிவை உட்புகுத்துவதன் மூலம் திருத்துகின்றதென்பதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது 291இ என்னும் பிரிவின் கீழ் தண்டிக்கப்படற்பாலதான தவறொன்றிற்கு வழக்குத் தொடுப்பதற்கானதொரு முன் தேவைப்பாடாக சட்டத்துறைத் தலைமை அதிபதியின் அனுமதியை தேவைப்படுத்துவதற்கானதாகும்.*

***வாசகம் 3 :*** *இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்திற்கான முதலாம் அட்டவணையை திருத்துகின்றதென்பதுடன், 2 ஆம் வாசகத்தினால் செய்யப்பட்ட திருத்தத்திற்கு விளைவாந்தன்மையுடைய ஓர் திருத்தத்தைச் செய்கின்றது.*

**குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை**
**(திருத்தம்)**

*ச.வ.ஒ. 40/2015*

**1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தினைத் திருத்துவதற்கான தொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர்.*

**1**. இச்சட்டம், 2015 ஆம் ஆண்டின்   ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமென எடுத்துக் காட்டப்படலாம்.

*1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சட்டத்தின் 135 ஆம் பிரிவினைத் திருத்துதல்.*

**2**. 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் (இதனகத்துப் பின்னர் ‘‘முதன்மைச் சட்டவாக்கம்’’ எனக் குறிப்பீடு செய்யப் படும்) 135 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (உ) என்னும் பந்தியில் ‘‘தண்டனைச் சட்டக்கோவையின் 290அ என்னும் பிரிவின்கீழ் அல்லது 291ஆ என்னும் பிரிவின்கீழ் தண்டிக்கப்படற்பாலதான தவறு எதனையும்’’ என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, ‘‘தண்டனைச் சட்டக்கோவையின் 291அ, 291ஆ அல்லது 291இ என்னும் பிரிவின்கீழ் தண்டிக்கப்படற்பாலதான தவறு எதனையும்’’ என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத் திற்கான முதலாவது அட்டவணை யைத் திருத்துதல்.*

**3**. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான முதலாவது அட்டவணை யானது அதன் 291ஆ என்னும் பிரிவு தொடர்பான பதிவுகளை உடனடுத்துப் பின்வரும் புதிய பதிவுகளை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

2-PL 009561-225 (2015/12)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| "291இ | பேசப்படும், எழுதப்படும் அல்லது வாசிக்கப்படவென முன்னப்படும் சொற்களின் பயன்பாட்டால் அல்லது குறிகளால் அல்லது தெரியும்படியான பிரதிபலிப்புக்களினால் அல்லது வேறு வகையாக வன்செயல்களை அல்லது சமய, இன ரீதியான அல்லது இனவாதமான ஒற்றுமையின்மையை அல்லது பகைமை உணர்ச்சியை அல்லது எதிர்ப்பு நிலையை தோற்றுவித்தல் அல்லது தூண்டுதல். | பிடிவிறாந்து இல்லாமல் கைது செய்யப்படலாகாது. | பிடியாணை | பிணையில் செல்லப் படற்பாலது | இணங்கித் தீர்க்கப் படற்பாலதல்ல. | இரண்டு ஆண்டுகளுக்கு இரு வகையில் ஒரு வகையிலான மறியல் தண்டனை. | நீதிவான் நீதிமன்றம்". |

**4.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*